**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண். 102/2024</u>**

பெயர் : கேசவன் த/பெ. கிருஷ்ணமூர்த்தி நாள் : 10.06.2026

**<u>வா.சா.1 : 1 முதல் 6 வரையான பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சரஸ்வதி என்பவரிடம் இருந்து தான் சொத்தை வாங்கினேன் என்றால் சரிதான். சரஸ்வதி கிரையம் பெற்ற போது 4580 சதுரடிகள் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 4580 சதுரடியில் 2367சதுரடிகள் நான் சரஸ்வதியிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். 2367 சதுரடிகளுக்கு செல்வதற்காக 602 சதுரடிகள் தடத்திற்காக கிரையம் பெற்றேன் என்றால் இல்லை, சண்முகமும் நானும் சேர்ந்து எங்களுடைய சௌகரியமான எங்கள் இருவரின் பொது தட பயன்பாட்டிற்காக வாங்கினோம். நான் வாங்கும்பொழுது மனை எண். 78/85 மனை அங்கீகார பெறப்படவில்லை என்றால் பெறப்பட்டுள்ளது. எனது பத்திரத்தில் 6வது பக்கத்தில் 30அடி அகல கிழமேல் ஒருரோடும், 30 அடி அகலத்தில் தென்வடலாக 3 ரோடுகளும், 20 அடி அகலத்தில் தென்வடலாக 1 ரோடும் ஏற்படுத்தியதின் படி நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.3 ஆவணத்தில் LPA 78/85 ஐ தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணத்தில் 30அடி அகல கிழமேல் ஒருரோடு உள்ளது என்றால் சரிதான். 20 அடி அகலத்தில் தென்வடலாக 1 ரோடும் உள்ளது என்றால் சரிதான். 30 அடி அகலத்தில் தென்வடலாக 3 ரோடுகள் வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் தாவா சொத்தில் அந்த மாதிரியான அம்சம் காணப்படுகிறது. வா.சா.ஆ.8 தவறான ஆவணத்தை கொண்டு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வேறு பல வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படயில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

3. என்னிடம் காட்டப்படுவது தான் LPA 78/85 ஆவணம் என்றால் சரிதான். LPA 78/85 ஆவணத்தில் நான் சொல்வது போல் 30 அடி அகலத்தில் தென்வடலாக 3 ரோடுகள், கிழமேல் தென்வடல் ரோடுகள் உள்ளது என்றால் சரிதான். 20அடி அகல ரோடு மொத்தம் தென்வடலாக நீளம் 100 அடி என்றால் இல்லை, 144 அடி ஆகும். நான் பொய்யாக 144 அடி என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைக்கு வடபுறமாக உள்ளது மனை எண்.16 என்றால் சரிதான். எனது மனையின் கிழபுறம் 20 அடி ரோட்டின் தென்வடலடி எவ்வளவு அளவு என்றால் 62 அடி ஆகும். (நானும், சண்முகமும் சேர்ந்து கிரையம் பெற்ற இடத்தையும் சேர்த்து) மனை எண்.16 தென்வடலடி 40 என்று சொன்னால் சரிதான்.

4. மனை எண்.17 தென்வடலடி 45 என்று சொன்னால் எனக்கு சரியாக தெரியவில்லை, ஆனால் ஒட்டுமொத்தமாக அந்த ரோடு தென்வடலடி 144 அடி ஆகும். எனது மனை எண்.15 ல் எனக்கு பாத்தியப்பட்டது 20அடி அகல பாதையில் 15 அடி தான் என்று சொன்னால் சரியல்ல. 15 அடி அகலத்தில் தான் 602 சதுரடி பொது பாதை

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.10 18:05:16 +0530

இருக்கிறது என்றால் அது தவறு, 62 அடியில் உள்ளது. 15 அடி போக மீதமுள்ள 50 அடி கிழபுறம் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடம் தான் உள்ளது, 20 அடி தடத்தில் எனக்கு இடமில்லை என்றால் தவறு. நான் எனது மனையில் சாய்தளம் அமைக்க மண் கொட்டியபோது பிரதிவாதிகள் ஆட்சேபனை தெரிவித்தாகவும் நான் மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார்தெரிவித்தாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மண் கொட்டியபோதே அது பூங்காவிற்கு சொந்தமான இடம் என்று ஆட்சேபனை தெரிவித்தார்களா என்றால் இல்லை. மண் கொட்டிய பிறகாவது ஆட்சேபனை தெரிவித்தார்களா என்றால் இல்லை. மண்ணை கொட்டிய பிறகு அது பூங்காவிற்கு சொந்தமான இடம் என தெரிந்து கொண்டு நானே JCB வைத்து அப்புறப்படுத்திக் கொண்டேன் என்றால் இல்லை, பிரதிவாதிகள் 7 நபர்கள் தான் அப்புறப்படுத்தினார்கள்.

5. வா.சா.ஆ.8 ஆவணம் தவறு என்று சொல்லி 7ம் பிரதிவாதி கேசவன் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வருவாய்துறை அதிகாரிகளுக்கு எதிராக Writ மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மறுஅளவை செய்து உட்பிரிவு செய்யுமாறு உத்தரவிட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் பின்னிட்டு வட்டாட்சியர் நான் கிரையம் பெற்ற நிலமானது ரோடு என உள்ளது என்பதை என்னிடம் கூறினார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் 05.12.2025 தேதி அன்று புதிய உட்பிரிவு செய்து உத்தரவிட்டுள்ளார் என்றால் அதுபற்றி தெரியவில்லை. மேற்படி விபரத்தை தெரிந்து கொண்டு நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சொத்தின் கிழபுறம் தென்வடலாக 15 அடி தான் உள்ளது என்றால் சரியல்ல. அதற்குஅதிகமாக உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. 20 அடி அகல பாதை மொத்த நீளம் 100 அடி தான் என்றால் சரியல்ல. அந்த 100 அடியில் எனக்கு 15 அடி அகல தான் எனக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. எனவே தவறான ஆவணத்தின் அடிப்படையில் நான் உரிமைய கோருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.10 18:05:21 +0530

-